விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 211 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 02 வெள்ளிக்கிழமை (18.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு கொழும்பில் போராட்டம்




## பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி கொழும்பில் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தைப் பொலிஸார் தடுத்து நிறுத்த முற்பட்டதால் குழப்ப நிலை உருவானது.

'படுகொலைக்கு எதிராக எழுச்சி கொள்வோம்' எனும் தொனிப்பொருளில் நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பினரால் இந்தப் போராட்டம் ஏற்பாடு

16ஆம் பக்கம் பார்க்க

# அர்ச்சுனா - தவிசாளர்கள் கடும் வாக்குவாதம்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பரபரப்பு



(யாழ்ப்பாணம்)

கழிவகற்றல் சேவையை சரியான முறையில் மேற்கொள்ளாமல், வீதிப் புனரமைப்புக்கான ஒப்பந்தங்களைப் பெற்று அதில் கொமிசன் அடிப்பதற்கு முயற்சிக்காதீர்கள் என தவிசாளர்களைப் பார்த்து, பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் கூறியதால் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)



# இரணைமடுக்குளத்தில் தவறிவீழ்ந்தவர் மரணம்

## மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை விபரீதம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணி 15ஆம் பக்கம் பார்க்க

### வரிக்குறைப்புக்கு

# அமெரிக்கா நிச்சயம் ஒத்துழைக்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

இலங்கை அமெரிக்காவுடன் கடன் வழங்குநர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதால், அமெரிக்கா வரிக்கொள்கையின்போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். 16ஆம் பக்கம் பார்க்க

### வவுனியாவில்

# ரயில் மோதி ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியாவில் புகையிரதம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா புகையிரத நிலை

15ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தேவையற்ற விடயங்களே அதிகம் பேசப்பட்டன

## அமைச்சர் சந்திரசேகர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தேவையற்ற விடயங்களே அதிகம் பேசப்பட்டன என அமைச்சர் இ.சந்திரசேகர் கவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவர்

15ஆம் பக்கம் பார்க்க



# முல்லைத்தீவு சின்னாற்றில் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள சின்னாற்றுக்குள் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று மீட்கப்

15ஆம் பக்கம் பார்க்க

# பலாலி இராஜராஜேஸ்வரி அம்மனை

## தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை வழிபட அனுமதி

(யாழ்ப்பாணம்)

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு தினமும் காலை 06 மணி முதல் மாலை 06 மணி வரையில் தற்காலிக பாதை ஊடாக சென்று வழிபாடுகளை மேற்கொள்ள இராணுவத்தினர் ஆடிப்பிறப்பு தினமான நேற்று வியாழக்கிழமை முதல் அனுமதி வழங்கியுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

# நெடுந்தீவு துறைமுகத்தில் திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் வைத்து நேற்று மாலை நெடுந்தாரகையில் வந்த பயணிகளை நெடுந்தீவு

15ஆம் பக்கம் பார்க்க

### நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

# கே.கே.எஸ் - நாகபட்டினம் கப்பல் சேவையில் சலுகைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே கப்பல் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளுக்கு விசேட சலுகைகளை வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் உரிமையாளர் சுந்தர்ராஜன் தெரிவித்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால்அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க மீள்கேள்வி மனு கோரலுக்கான அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 18.07.2025 தொடக்கம் 31.07.2025 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 01.08.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 01.08.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

### கேள்வி அட்டவணை

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/06 | ரூபா 10,149,300.00 | ரூபா 9,000.00 | ரூபா 152,239.50 | ரூபா. 2,000.00 |


### நிபந்தனைகள் :

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "தவிசாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் " என்ற முகவரிக்கு 01.08.2025ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்ப படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் , சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்க்ள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது..
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபையின் தவிசாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி (C-3440) 18.07.2025

# வவுனியா மாநகர சபையின் ஆணையாளராக வாகீசன் நியமனம்

## நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்



வவுனியா மாநகர சபையின் புதிய ஆணையாளர் பொ.வாகீசன் நேற்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா நகர சபையாக இருந்து மாநகரசபையாக தர முயர்த்தப்பட்டுள்ள நிலையில் அதன் ஆணையாளராக இதுவரை வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் செயற்பட்டிருந்தார்.

இந்தநிலையில் புதிய ஆணையாளராக வடமாகாண மகளீர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளராக இதுவரை கடமையாற்றிய பொ.வாகீசன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண ஆளுனர் நா.வேதநாயகத்தினால் குறித்த நியமனம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய புதிய ஆணையாளர் நேற்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளார். (ம-7)


# நல்லை மங்கையர்க்கரசியின் விழிநீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின்
ஆரம்பப் பிரிவு ஆசிரியை
திருமதி **சிவாம்பிகை ஞானசர்மா**
அவர்களின் பாசமிகு கணவர்

**அமரர் சிவஸ்ரீ**
**சுந்தரக்குருக்கள்**
**ஞானசர்மா**

அவர்களின் பிரிவுத் துயரில்
நாமும் பங்கேற்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.
(C-3436)


# இராசிபலன்

18.07.2025
ஆடி 02, வெள்ளிக்கிழமை
அட்டமி பிற்பகல் 4.18 மணிவரை.

அச்சுவினி பின்னிரவு 1.59 மணிவரை
சுபநேரம் 6.00 - 7.30 மணிவரை
இராகுகாலம் 10.30 - 12.00 மணிவரை

சந்திராஷ்டமம்.
உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்** எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கடகம்** உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், தொட்ட காரியங்கள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்** தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**துலாம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ் கூடும், இறைவழிபாட்டால் ஆர்வம் கூடும், செய்தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**தனுசு** கேளிக்கைகள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**கும்பம்** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு மகத்துவம் தரும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**மீனம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

தாய், தந்தையர் வாய்ப்பது விதி. நண்பர்கள் வாய்ப்பது மதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கச்சதீவை மீட்டெடுப்பது

# இலங்கை - இந்திய மீனவர்

# பிரச்சினைகளுக்கு தீர்வாகாது!

### கடல்சார் மற்றும் ராஜதந்திர நிபுணர்கள் இந்திய அரசாங்கத்திடம் வலியுறுத்து

(சென்னை)

**சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள கச்சதீவை மீட்டெடுப்பது மட்டும் இலங்கை இந்திய கடற்றொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்காது என்று கடல்சார் மற்றும் ராஜதந்திர நிபுணர்கள் கருத்துரைத்துள்ளனர்.**

இந்திய ஊடகம் ஒன்றும் இந்த கருத்தை வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில், இந்தியக் கடல் பகுதியில் மீன் வளங்கள் குறைவதன் காரணமாக, இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கைப் பகுதிக்குள் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்பதையும் கடல்சார் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, கச்சதீவின் கட்டுப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு பதிலாக, இலங்கையுடன் நீண்டகால குத்தகை அல்லது மீன்பிடி உரிமை ஒப்பந்தம் தொடர்பில் இந்தியா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று நிபுணர்கள் யோசனையை முன்வைத்துள்ளனர்.

இது குறித்து இந்தியா ஆழமாக பரிசீலிக்க வேண்டும் என்றும் நிபுணர்கள் இந்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர். (நி)

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்றைய தினத்துடன் ஒப்பிடும் போது நேற்று மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 297.64 ரூபாவாகவும், 305.11 ரூபாவாகவும் உள்ளது. நேற்று முன்தினம் புதன் கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 297.30 ரூபாவாகவும், 304.81 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

வளைகுடா நாணயங்கள் உட்பட ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சி கண்டுள்ளது. (நி)

## வல்லைப் பாலம் புனரமைப்பிற்கு வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

### உறுதியளித்தார் அமைச்சர் சந்திரசேகரன்

(யாழ்ப்பாணம்)

வல்லைப் பாலத்தை விபத்துக்கள் ஏற்படாதவாறு புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் சுட்டிக்காட்டினார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட வலிதெற்கு பிரதேச சபை தவிசாளர் வல்லைப் பாலம் விபத்துக்கள் நிறைந்த இடமாக இருக்கின்றது. இதுவரை நான்கு மரணங்கள் அதில் ஏற்பட்டுள்ளதுடன் பல அரச, தனியார் வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன.

எனவே அதனை புனரமைத்துத் தர வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், வல்லைப் பாலம் விபத்துக்கள் நிறைந்த ஆபத்தான இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அதன் புனரமைப்புக்களை நிதியைப் பூரணமாக ஒதுக்கி அதைப் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என நம்பிக்கை வெளியிட்டார்.

இதனையடுத்து நிரோஷ் குறித்த பாலத்தின் ஆபத்துத் தன்மையினை கருத்திற்கொண்டு பாலத்தின் புனரமைப்பு தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றக்கோரியதையடுத்து அது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (க-நி)

## நாட்டில் தோல் நோய்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் தோல் தொடர்பான நோய்கள் திடீரென அதிகரித்து வருவதாகச் சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரித்துள்ளது.

தோல் நோய் மருத்துவர் ஜனக அகரவிட்ட இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதன்படி ரிங்வோர்ம் என்ற பூஞ்சை தோல் நோய் பரவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நோய் ஏற்பட்டால், தோலில் சிவப்பு, வட்ட வடிவ தடிப்புகள் தோன்றும்.


தோல் தொடர்பு அல்லது ஆடைகள் போன்றவற்றின் ஊடாக இந்த நோய் பரவுகிறது.

இந்த நோய் காரணமாகத் தோல் சிதைவு, வறட்சி, சிவத்தல், அரிப்பு, எரிதல் மற்றும் ஒட்டும் தன்மை போன்ற பாதிப்புக்கள் ஏற்படும்.

இந்தநிலையில் இலங்கை அரசால், பதிவு செய்யப்படாத பூச்சுக்கள் அல்லது உரிய ஆய்வக விபரங்கள் இல்லாத தயாரிப்புகளைப் பயன்படுத்துவது தொடர்பில் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நோயைத் தடுப்பதற்குப் பொதுமக்கள் சுயசுகாதார பழக்க வழங்கங்களை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி)

## கெஹெலியவின் குடும்பத்தாருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் மருமகனுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று வியாழக் கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

97 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த வழக்கின் பிரதிவாதிகளை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்க பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக வெளிநாட்டு பயணத் தடையை விதித்த நீதவான், கடவுச்சீட்டுகளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (நி)

## ஈராக்கிலுள்ள பல்பொருள் அங்காடியில் பாரிய தீ விபத்து!- 50 பேர் உயிரிழப்பு

(டெஹ்ரான்)

ஈராக்கில் உள்ள மிகப்பெரிய பல்பொருள் அங்காடியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 50 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு ஈராக்கில் உள்ள அல்-குட் நகரில், உள்ள பல்பொருள் அங்காடியொன்றின் 5 ஆவது மாடியிலேயே குறித்த தீ விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





குறித்த விபத்தில் 50 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இதேவேளை குறித்த தீ விபத்திற்கான காரணம் மற்றும் தீ விபத்தினால் ஏற்பட்ட சேத விபரம் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி-இடைக்குறிச்சி சர்வோதயா முன்பள்ளியின் மாதிரிச்சந்தை நிகழ்வு அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் இடம் பெற்றது. (படம்-சுபேசன்)



அண்மையில் இடம்பெற்ற மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் தென்மராட்சி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய தரம் மூன்று கலப்பு அணியினர் பங்குபற்றி இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளனர். (படம்-சுபேசன்)



பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் .அரச உத்தியோகத்தர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ.சந்திரசேன தலைமையில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (படம்-தேவானந்தன்)



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையிலான சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று ஆளுநர் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் சாவகச்சேரி நகர சபையின் ஆளணி வெற்றிடங்கள் உள்ளிட்ட தேவைப்பாடுகள் தொடர்பில் கோரிக்கை மனுவொன்றை தவிசாளர் ஆளுநரிடம் கையளித்தார். (படம்-சுபேசன்)






சங்கானை கோட்ட முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வானது சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (படம்-கஜிந்தன்)



தமிழர் வாழ்வியலில் சிறப்பு மிகுந்த தினமான ஆடிப்பிறப்பு விழா கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக் கிழமை காலை 10.30 மணியளவில் சிறப்புற கொண்டாடப்பட்டது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில், கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலக நலன்புரிச் சங்கமும் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரி மண் அகழ்வுக்கு அனுமதி தாருங்கள்!

## வேலணை பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட வீதிப்புனரமைப்பிற்கு ஊரி மண்ணை எடுப்பதற்கு அனுமதி தர வேண்டும் என வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.அசோக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு வீதிப்புனரமைப்பு தொடர்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளில் நிதி வளம் குன்றிய பிரதேச சபையாக எமது வேலணைப் பிரதேச சபை இருந்து வருகிறது.

எமது பிரதேச சபைக் குட்பட்ட வீதிகளை தார் வீதியாக மாற்ற எம்மிடம் போதிய நிதி இல்லாததனால் ஊரி மண்ணைக் கொண்டே அநேக வீதிகளைப் புனரமைப்புச் செய்து வருகின்றோம்.

ஆயினும் தற்போது ஊரி மண்ணை அள்ளுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

எனவே ஊரி மண்ணை அள்ளும் அனுமதியைப் பெற்றுத் தந்தால் ஊரி மண்ணைக் கொண்டேனும் எமது சபை வீதியைப் புனரமைக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர், மிக விரைவில் அதற்கான அனுமதியைப் பெற்றுத் தர ஆவண செய்வதாக உறுதியளித்தார். (க-நி)

# வீதிப் புனரமைப்புகளின் போது தன்னிச்சையாக செயற்படும் எம்.பிகள்

## பிரதேச சபைத் தவிசாளர்கள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபையின் ஆழுகைக்குட்பட்ட வீதிப் புனரமைப்புகளை முன்னெடுக்கும் போது பிரதேச சபையின் தவிசாளர்களுக்கு எதுவித அறிவித்தலும் இன்றி தேசிய மக்கள் சக்தி அரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாகச் செயற்படுத்துகிறார்கள் என பிரதேச சபைகளின் தவிசாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பிரதேச சபைத் தவிசாளர்கள் வீதிப் புனரமைப்பு தொடர்பில் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு கருத்துரைக்கையில், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக வீதிப்புனரமைப்பில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பிரதேசசபைக்கு சொந்தமான வீதிகளை எமக்கான அழைப்பையும் தவிர்த்து அவர்கள் புனரமைப்புச் செய்கிறார்கள். வீதிப்புனரமைப்பை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளை ஆளும் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும்.

இல்லையேல் அது முரண்பாட்டையே ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (க-நி)

கட்டைவேலி- நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-கரவெட்டி

'கூறுவிலை கோரல்'

எமது சங்கத்தின் வதிரி சிறிய கூட்டுறவு நகர் கட்டடத்திற்கு திருத்த வேலைகள் மற்றும் வர்ணப் பூச்சு வேலைகள் செய்து தருவதற்கு மூடிய கூறு விலைகள் கோரப்படுகிறது.

வேலை தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் தலைமை காரியாலயத்தில் ரூபா 500.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தி, "கூறுவிலை" என உறையில் தலைப்பிட்டு 25.07.2025 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

021 226 3263
18.07.2025

பொது முகாமையாளர்
கட்.நெல்.ப.நோ.கூ. சங்கம்,
கரவெட்டி.

(சி-3439)

# வெண்ணிற ஈயினைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் கோப்பாயில் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் வெண்ணிற ஈயினைக் கட்டுப்படுத்தும் வேலை திட்டம் நேற்று கோப்பாய் பிரதேச செயலகத்திற் குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

நாடு முழுவதும் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் மருந்து தெளிக்கும் செயற்பாடு உரும்பிராய் கமநல சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் தென்னை பயிர் சேவை சபை உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது விவசாய திணைக்களத்தின் மருந்து தெளிக்கும் இயந்திரத்தின் உதவியுடன் தென்னை மரங்கள் காணப்படும் வீடுகளுக்கு குழுக்களாக செல்லும் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினர் மற்றும் கமநல சேவை உத்தியோகத்தர்கள் அனைத்து தென்னை மரங்களுக்கும் மருந்து விசிறும் வேலைத்திட்டத்தை மேற்கொண்டனர்.


மருந்து விசிறும் நடவடிக்கையானது தென்னை பயிர்ச் செய்கையின் தலைவர் கலாநிதி சுனிமால் ஜெயக்கொடி, தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் வட பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் ஆகியோரின் பங்குபற்றலுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே குறித்த மருந்து தெளிக்கும் வேலைத்திட்டத்தினை பொதுமக்கள் தமது அனைத்து தென்னைகளுக்கும் மேற்கொள்ள தென்னை பயிர்ச் செய்கை சபையுடன் இணைந்து செயற்படுமாறு தென்னை பயிர்ச் செய்கை சபையின் வடக்கு மாகாண முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் இன்றைய தினம் மருந்து தெளிக்கும் செயற்பாடு முன் னெடுக்கப்படவுள்ளதால் பொது மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்குமாறும் தென்னை பயிர்ச் செய்கை சபை கேட்டுக்கொண்டது.(நி-33)

செம்மணி படுகொலை

# எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

செம்மணி படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பினரால் நேற்று இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் சிவில் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.(நி)

DISTRICT SECRETARIAT, JAFFNA
INVITATION FOR BIDS-(IFB- 01)

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by **IFB 01 for Construction of Panaveddy Drainage Canal for Panaveddy Road 1st Culvert to 2nd Culvert & Waiting Canopy for Proposed Passport Office at District Secretariat Premises, Jaffna** Please see the above mentioned Invitation for Bids (IFB-01) in **Daily News dated 18.07.2025** or on Jaffna District Secretariat **website www.jaffna.dist.gov.lk**

**Chairman,**
**Department Procurement Committee,**
**District Secretariat,**
**Jaffna.**

(C-3538)

கண்ணீர் அஞ்சலி

தாய் மடியில் 10.11.1935
இறைவன் அடியில் 13.07.2025

யாழ்.மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தின் பொருளாளர் திருமதி.மாலதி யோகராஜன் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர். இராஜேஸ்வரி சிவப்பிரகாசம்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



யாழ்.மாவட்டம்.
விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கைப்பணிப்போட்டி மற்றும் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கைப்பணிக் கைத் தொழிலில் ஈடுபடும் கைப்பணியாளர்களைத் தேசிய ரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைகள் பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும் போட்டி மற்றும் கண்காட்சி இவ் வருடமும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிக்கான மாகாண மட்டப் போட்டி மற்றும் கண்காட்சி ஒக்டோபர் மாதம் நடுப்பகுதியில் எமது திணைக்களத்தினால் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் போட்டியில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள கைப்பணியாளர்கள் கட்டாயம் தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவினை மேற்கொள்ளாதவர்கள் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள வட மாகாண தொழிற்துறை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தங்கள் பதிவினை விரைவாக மேற்கொண்டு போட்டிக்கான ஆக்கங்களை தயார்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மாகாணப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் அறிவித்துள்ளார்.

போட்டிக்கான பிரதான கைப்பணித்துறைகளாக களிமண் சார்ந்த ஆக்கங்கள், தும்பு, ஓலை, புல் சார்ந்த ஆக்கங்கள், பிரம்பு, மூங்கில் சார்ந்த ஆக்கங்கள், உலோக கைப்பணிப் பொருட்கள் கைத்தறி நெசவு உற்பத்திகள், சங்கீத உபகரணங்கள், துணிகள் மற்றும் துணிகளிலான கைப்பணிப் பொருட்கள் பற்றிக், ரேந்தை, மரம் சரிந்த ஆக்கங்கள், தோற் பொருட்கள், கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள், பாரம்பரியக் கலை வரைபுகளும் சிற்பங்களும், தென்னை, பனை, கித்துள் சார்ந்த உற்பத்திகள், கடதாசி மற்றும் பல்ப் சார்ந்த ஆக்கங்கள், சிப்பி ஓடுகள், நானாவித கைப்பணிப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் என்பனவாகும். (8)

# வயலுக்குள் பாய்ந்தது தனியார் பேருந்து!



(அராலி)

தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் 789 வழித் தட பேருந்து ஒன்று வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த பேருந்தானது யாழில் இருந்து பயணிகளை ஏற்றியவாறு சித்தங்கேணி நோக்கி பயணித்துக் கொண்ருந்தபோது வட்டுக் கோட்டைச் சந்திக்கு அண்மித்த பகுதியில் இருக்கும் வயலுக்குள் பாய்ந்த விபத்துக்குள்ளானது.

இருப்பினும் குறித்த விபத்தில் பயணிகள் எவருக்கும் எந்த விதமான உயிராபத்தும் ஏற்படவில்லை.

வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மணல் , துவிச்சக்கர வண்டிகள், சவல்கள் மற்றும் இதர பொருட்கள் என்பன எதிர்வரும் 2025.07.26 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பிராந்திய மற்றும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இவ் ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடித்து உதவுமாறு நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமை கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களினைப் பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பார்வையிட முடியும். ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளித்தல் வேண்டும். ஏல விற்பனையின் போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும். ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப் பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும், காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (8)

## சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள்

# நடைபாதை வியாபாரிகளுக்கு இறுக்கமான நடைமுறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகளுக்கு வரி விதித்து இறுக்கமான நடைமுறையைப் பின்பற்ற சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே சபையில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டு அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தவும் பணிக்கப்பட்டது.

இதன்போது சந்தை உட்புறப் பகுதியில் நடைபாதைக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் தன்னிச்சையாக அமைக்கப்பட்ட பழக்கடைகளுக்கு தடை விதித்தல், நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுகின்ற வியாபரிகளிடம் வரி அறவிடல்,

அத்துடன் சகல வியாபார நிலையங்களும் நகர சபையில் கட்டாயம் வியாபார உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நடைபாதை வியாபாரிகளிடம் வரி அறவிடாமை மற்றும் வியாபார உரிமம் பெறாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டமை போன்ற செயற்பாடுகளால் நகர சபையின் வருமானம் இழக்கப்பட்டிருப்பதாகவும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (8-30)

## யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின்

# திரைப்படவிழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம், தனது முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, நடத்துகின்ற திரைப்பட விழா நேற்று 17 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இல.18/2, அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள "எங்கட புத்தகங்கள்" இல்லத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவில் ஜப்பான், நாம், செனகல், துருக்கி, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் முழுநீளம் திரைப் படங்கள் ஆறும், ஆவணப்பட மொன்றும் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும், நாளை, நாளை மறுதினம் மு. ப. 10.00, மாலை 4. 30 மணிக்கும், திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கும் காட்சிகள் நடைபெறும். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 210 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 500 | 350 | 300 |
| தக்காளி | 160 | 200 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 220 | 240 |
| கோவா | 300 | 420 | 400 | 300 | 400 |
| கரட் | 450 | 500 | 500 | 400 | 400 |
| பூசணி | 100 | 180 | 120 | 100 | 150 |
| புடோல் | 100 | 150 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 200-350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 110 | 150 |
| பாகற்காய் | 500 | 650 | 600 | 500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 90 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 240 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 180 | 200 |
| கறிமிளகாய் | 500 | 650 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 450 | 500 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 60 | 60-120 | 80-100 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 150 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 120 | 80-150 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 400 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 80 | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வீட்டுத் திட்டத்திற்கான கொடுப்பனவு அதிகரிப்பு

## யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அரச வீட்டுத்திட்டத்திற்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.**



யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான கொடுப்பனவு அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் 10 இலட்சம் ரூபா கொடுப்பனவுக்கான வீட்டுத் திட்டக் கொடுப்பனவு 15 இலட்ச மாகவும் 6 இலட்சம் ரூபா வீட்டுத் திட்டக் கொடுப்பனவு 9 இலட்சமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-றி)

## அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 13 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

1. அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
2. கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
3. தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார் இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
5. இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
6. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**
**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்**
**2025.07.19 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 1 | கூட்டுறவாளர் வீதி அளவெட்டி | சங்கத்தலைமைக்காரியாலய மண்டபம் கூட்டுறவாளர் வீதி அளவெட்டி | திரு.யோசேப்.ஜெகதாஸ் |
| 2 | 2 | அலுக்கை அளவெட்டி | கிராமசேவையாளர் மண்டபம் , அலுக்கை அளவெட்டி தெற்கு J/219 | திரு.சண்முகம் சசீந்திரன் |
| 3 | 3 | ஆலடி அளவெட்டி தெற்கு | கிராமசேவையாளர் மண்டபம் அளவெட்டி மேற்கு J/220 | திரு.கந்தசாமி சசிகரன் |
| 4 | 4 | முதலியார் கோயிலடி | முதலியவேள் முன்பள்ளி, அளவெட்டி வடக்கு | திரு.கனகரட்ணம் திசாகரன் |
| 5 | 5 | அளவெட்டி வடக்கு | அளவெட்டி வடக்கு சனசமூக நிலையம் அளவெட்டி வடக்கு | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் |
| 6 | 6 | கணேஸ்வரம் | கிராம அபிவிருத்தி சங்கம் கணேஸ்வரம் அளவெட்டி | திரு.நாகமுத்து ஜெயவதனன் |
| 7 | 7 | அளவெட்டி தெற்கு | முற்போக்கு சனசமூகநிலைய முன்பள்ளி மண்டபம் அளவெட்டி தெற்கு | திரு.கணேஸ் சுரேஸ்பாவா |
| 8 | 8 | மல்லாகம் சந்தி | கிளை 12 இன் கட்டிடம் கே.கே.எஸ் வீதி மல்லாகம் | திரு.தங்கராசா.கண்ணதாசன் |
| 9 | 9 | கல்லாரை மல்லாகம் | கிளை 9 இன் கட்டிடம் கல்லாரை மல்லாகம் | திரு.ஜெயபாலன்.சதீஸ் |
| 10 | 10 | குளமங்கால் மல்லாகம் | ஆபிரகாம் சனசமூக நிலையம் குளமங்கால் மல்லாகம் | திரு.வடிவேல் கிரிசாந் |
| 11 | 11 | கலைநகர் அளவெட்டி தெற்கு | கலைவாணி சனசமூக நிலையம் கலைநகர் அளவெட்டி தெற்கு | திரு.வல்லிபுரம் நிதர்சன் |
| 12 | 12 | நீதிமன்ற வீதி மல்லாகம் | சன்மார்க்க சனசமூக நிலையம் நீதிமன்றவீதி மல்லாகம் | திரு.பாக்கியராசா குருபரன் |
| 13 | 9A | கே.கே.எஸ் வீதி மல்லாகம் | மல்லாகம் கிராமியவங்கி கட்டிடம் கல்லாரை மல்லாகம் | திரு.சபாரத்தினம்.அருள்நாதன் |

**கூட்டுறவு அபிவிருத்தி**
**உதவி ஆணையாளர் அலுவலகம்**
**இல 857, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**ஒப்பம் திரு.கி.சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி**
**உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(4830)

# வீதி புனரமைப்பின் போது வேலைவாய்ப்புக்களை வழங்கலாம்

## இளங்குமரன் எம்.பி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கிராமிய வீதிகளை சாதாரண தார் வீதிகளாக செப்பனிடுவதன் மூலம் உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் பலர் பயனடைவதுடன் எமது பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதாக அமையும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு வீதிப் புனரமைப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வீதிப் புனரமைப்பில் அக்கறை காட்டி வரும் நிலையில் கிராமிய உள் வீதிகளுக்கு காப்பற் இடும் செயலை நிறுத்தி சாதாரண தார் வீதி, கொங்கிறீற் வீதி போன்ற திட்டங்களை செயற்படுத்தினால் அதனூடாக உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் பயனடைவதுடன் எமது சமூகத்திற்கு வேலை வாய்ப்பை வழங்கும் செயலாக அது அமையும் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கு பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி. காபற் வீதியிடல் அரசாங்கத்தின் முடிவாக இருக்கிறது. எனவே எம்மால் அதனையே செயற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (க-றி)

## அமெரிக்க வரி விதிப்பால் ஏற்றுமதித்துறைக்கு பாரிய அச்சுறுத்தல்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேங்காய் சார்ந்த பொருட்களுக்கு அமெரிக்கா 30 சதவீத இறக்குமதி வரியை விதிக்க தீர்மானித்தமை ஏற்றுமதித் துறைக்கு பாரிய அச்சுறுத்தல் என இலங்கை தெங்குக் கைத்தொழில் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தெங்கு கைத்தொழில் மூலம் ஆண்டுக்கு 857 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான வருமானத்தை இலங்கை தற்போது பெற்றுக்கொள்கிறது. தேங்காய் சார்ந்த பொருட்களுக்கான இலங்கையின் ஒற்றை பாரிய இறக்குமதியாளராக அமெரிக்காவே விளங்குகிறது.

இதன்படி ஆண்டுக்கு 160 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஏற்றுமதிகளை இலங்கை மேற்கொள்கிறது.

இந்தநிலையில், அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கை இலங்கையின் விலைப்போட்டித்தன்மையை அழித்துவிடுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தெங்குத் தொழிலை நம்பியுள்ள 800,000 இலங்கையர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் துறைகளில் 150,000 இற்கும் மேற்பட்ட நேரடி வேலைகள் இப்போது உடனடி அச்சுறுத்தலில் உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## ஐஸ்லாந்தில் வெடித்து சிதறிய எரிமலை!



(ஐஸ்லாந்து)

ஐஸ்லாந்து - ரெய்க் ஜேன்ஸ் தீபகற்பத்தில் எரிமலை ஒன்று வெடித்துச் சிதறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சம்பவமானது நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீவிர நில அதிர்வுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த வெடிப்பு நிகழ்ந்ததாக ஐஸ்லாந்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் மக்களும் சுற்றுலா பயணிகளும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

எரிமலையில் இருந்து வெளியேறும் லாவா குழம்பு சுமார் 700 முதல் 1000 மீற்றர் அகலமுள்ள பிளவு வழியாக தென் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வருகிறது.

சுமார் 800 ஆண்டுகளாக செயலற்று இருந்த இந்த எரிமலைப் பகுதி கடந்த 2023 நவம்பர் முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜீன்ஸ் அணிந்தால் சிறை எந்த நாட்டில் தெரியுமா?



(பியாங்யாங்)

ஜீன்ஸ் தொடர்பாக உலகிலேயே மிகக் கடுமையான விதிகளைக் கொண்ட நாடு ஒன்று உள்ளது.


வடகொரியா மக்கள் ஜீன்ஸ் அணிவதில்லை. அங்குள்ள அரசாங்கம் ஜீன்ஸை மேற்கத்திய கலாசாரமாகக் கருதுகிறது.

குறிப்பாக அமெரிக்க செல்வாக்கின் சின்னமாக கருதுகின்றனர். அவர்கள் ஜீன்ஸ் அணிந்தால், துரோகிகளாகக் கருதப்படுகிறார்கள்.

மேலும், இங்கு மேற்கத்திய ஆடைகள், முடி வெட்டுதல் மற்றும் ஊடகங்களுக்கும் தடை உள்ளது. இதை மீறினால், கைது செய்யப்படுவார்கள்.

உலகில் மர்மமான நாடு என்று சொன்னால் அது வடகொரியா. அந்த நாட்டில் என்ன நடக்கிறது என்பது யாருக்கும் தெரியாது.

அந்த அளவிற்கு அந் நாட்டின் ஜனாதிபதியான கிம் ஜாங் உன் ஆட்சி செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



# அடுத்தடுத்து விலகும் க

# பெரும்பான்மையை இழ



மதக் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கட்டாய இராணுவச் சேவையில் இருந்து விலக்கு அளிக்கும் சட்டத்தை இயற்றத் தவறியதே இதற்கு முக்கிய காரணம் என்று இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

21 மாதங்களாக காசா உடனான போர் நடந்து வரும் சூழலில் இராணுவச் சேவை விலக்கு தொடர்பான இந்த வாதம் இஸ்ரேலில் விவாதமாக மாறியுள்ளது.

கடந்த ஆண்டு இஸ்ரேல் உச்ச நீதிமன்றம், அல்ட்ரா-ஆர்த்தடாக்ஸ் மாணவர்களுக்கான இராணுவ விலக்கை முடிவுக்குக் கொண்டுவர உத்தரவிட்டது.

புதிய இராணுவச் சேவை மசோதாவை உருவாக்க பாராளுமன்றம் முயற்சி செய்து வருகிறது.

அல்ட்ரா - ஆர்த்தடாக்ஸ் மத குருக்கள், புனித நூல்களை முழுநேரம் கற்பது புனிதமானது

## மரத்தை வெட்டியதால் 57 மாத சிறை

(லண்டன்)

மரத்தை வெட்டியதற்காக 2 வருடங்களின் பின்னர் இருவருக்கு 57 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட செய்தி இங்கிலாந்தில் பதிவாகியுள்ளது.

இங்கிலாந்து மக்களால் அதிகளவு நேசிக்கப்படும் Sycamore Gap மரமே வெட்டப்பட்டுள்ளது.

மரம் வெட்டப்பட்டமை மற்றும் வெட்டப்பட்ட மரம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த Hadrian's Wall மீது வீழ்ந்ததால் ஏற்பட்ட சேதம் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் 57 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



இந்த மரம் 1860 முதல் 1890ஆம் ஆண்டுக்குட்பட்ட காலப்பகுதியில் நடப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# கூட்டணிக் கட்சிகள் ...ந்த நெதன்யாகு அரசு!

**(ஜெருசலேம்) ................ இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான கூட்டணி அரசில் இருந்து அல்ட்ரா - ஆர்த்தடாக்ஸ் ஷாஸ் கட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை விலகுவதாக அறிவித்துள்ளது.**

என்றும், தங்கள் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்க்கப் பட்டால் மத வாழ்க்கையில் இருந்து விலகிவிடுவார்கள் என்றும் அஞ்சுகின்றனர்.

ஷேஸ் கட்சி விலகுவதற்கு ஒரு நாள் முன்னதாக, மற்றொரு அல்ட்ரா - ஆர்த்தடாக்ஸ் கட்சியான யுனைடெட் தோரா ஜூடாயிசம் கட்சியும் இதே காரணத்திற்காக அரசாங்கத்திலிருந்து விலகியது.

இந்த இரண்டு முக்கிய கட்சிகளின் விலகல், நெதன்யாகு அரசாங்கத்தை பெரும் நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது.

இஸ்ரேலிய பாராளுமன்றமான நெசெட்டில் மொத்தம் 120 இடங்கள் உள்ளன. யுனைடெட் தோரா ஜூடாயிசம் நெசெட்டில் 11 இடங்களைக் கொண்டுள்ளது.

யுனைடெட் தோரா ஜூடாயிசம் நெசெட்டில் 7 இடங்களைக் கொண்டுள்ளது.

இந்த இரு கட்சிகளின் விலகலுக்குப் பிறகு, நெதன்யாகுவின் கூட்டணிக்கு தற்போது 50 இடங்கள் மட்டுமே உள்ளன. ஆனால் பெரும்பான்மைக்கு 61 இடங்கள் தேவை.

எனவே நெதன்யாகுவின் கூட்டணி பெரும்பான்மையை இழந்து சிறுபான்மை அரசாங்கமாக மாறியுள்ளது. (நி)


## பெல்ஜியத்தில் இசைத் திருவிழா பிரதான மேடையில் தீப்பரவல்!

(பெல்ஜியம்)

பெல்ஜியத்தின் உலகப் புகழ் பெற்ற டுமாரோலேண்ட் இசைத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், பிரதான மேடையில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

"தீ விபத்தினால் டுமாரோலேண்ட் இசைத் திருவிழாவின் பிரதான மேடை கடுமையாக சேதமடைந்துள்ளது," என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது யாருக்கும் காயம் ஏற்படவில்லை.



தீ விபத்து ஏற்பட்ட போது விழாவிற்கு வந்தவர்கள் யாரும் அங்கு இருக்கவில்லை, ஆனால் சுமார் 1,000 ஊழியர்கள் இருந்ததாகவும், அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## சிரியா மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

## மூவர் உயிரிழப்பு, 34 பேர் காயம்!



(டமாஸ்கஸ்)

சிரியாவின் பாதுகாப்பு அமைச்சின் தலைமையகம், ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலுள்ள ஒரு நிலையம், இராணுவ உட்கட்டமைப்பு தளங்கள் என்பவற்றை குறிவைத்து கடந்த புதன்கிழமை அதிகாலை இஸ்ரேல் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதலை தொடங்கியது.

இந்த தாக்குதல், அண்மைய ஆண்டுகளில் சிரியா தலைநகர் டமாஸ்கஸின் மையப்பகுதியில் இஸ்ரேல் நடத்திய நேரடித் தாக்குதல்களில் ஒன்றாகும்.

இந்தத் தாக்குதல்களின் விளைவாக மூன்று பேர் உயிரிழந்ததாகவும், 34 பேர் காயமடைந்ததாகவும் சிரியா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியப் படைகள் மற்றும் சிரியா ஊடகங்கள் இரண்டும் வெளியிட்ட வீடியோ காட்சிகள், மத்திய டமாஸ்கஸில் உள்ள கட்டடத்தின் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட தருணத்தைக் காட்டுகின்றன.

ட்ரூஸ் போராளிகள் மற்றும் பிரிவினைவாத குழுக்களுக்கு இடையே பல நாட்களாக கொடிய மோதல்களால் பாதிக்கப்பட்ட தெற்கு சிரியா பிராந்தியமான சுவைடாவிற்கு அரசாங்கப் படைகளை அனுப்புவதற்கான கட்டளை மையமாக டமாஸ்கஸ் தலைமையகம் செயற்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளது.

சிரியாவின் தெற்கில் உள்ள சுவைடா பகுதியில், நாட்டின் சிறுபான்மையினரான ட்ரூஸ் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் வன்முறை அதிகரித்ததைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வார இறுதியில் ட்ரூஸ் போராளிகளுக்கும் உள்ளூர் பெடோயின் குழுக்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன.

இதனால் மோதலை அடக்க சிரியா அரசாங்கம் பாதுகாப்புப் படைகளை அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அப்போதிருந்து அரசாங்க ஆதரவுப் படைகளும் மோதலில் இணைந்துள்ளன.

ஞாயிற்றுக்கிழமை முதல் வன்முறையில் கிட்டத்தட்ட 250 பேர் உயிரிழந்துள்ளதாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

புதன்கிழமை சுவைடா தேசிய மருத்துவமனை தாக்கப்பட்டதாகவும் அது தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்குள் உள்ள பெரிய ட்ரூஸ் மக்கள் தொகை மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் ஹைட்ஸ் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த நிலைப்பாட்டைக் கொண்ட ட்ரூஸ் சமூகங்களின் சுய - அறிவிக்கப்பட்ட பாதுகாவலராக இஸ்ரேல் நீண்டகாலமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

மே மாதத்தில், சுவைதாவில் நடந்த வன்முறைக்கு பதிலளிக்கும் விதமாக இஸ்ரேல் டமாஸ்கஸ் மீது மற்றொரு தாக்குதலை நடத்தியது.

சிரியா ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள பகுதியை குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல் மூலமாக சிரியாவின் இறையாண்மை அப்பட்டமாக மீறப்பட்டதாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு குற்றம் சாட்டியும் இருந்தது.

ட்ரூஸ் இனத்தவர்கள் இஸ்லாத்தின் ஒரு கிளைப் பிரிவைப் பின்பற்றும் ஒரு அரபு சிறுபான்மைக்குழுவாகும். பெரும்பாலான ட்ரூஸ் இனத்தவர்கள் சிரியா, லைபனான் மற்றும் இஸ்ரேலில் வாழ்கின்றனர்.

சிரியாவில் 700,000 ட்ரூஸ் இனத்தவர்களும், லைபனானில் 300,000 பேரும், இஸ்ரேலில் 140,000 பேரும் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியை அரசியலாக்க வேண்டாம் பிரதமர் ஹரிணி எச்சரிக்கை

(கொழும்பு)

புதிய கல்வி சீர்திருத்தங்களில் வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன என்ற பொய்யான மற்றும் அரசியல் நோக்கமுடைய பிரச்சாரங்கள் பரப்பப்படுவது மிகவும் கவலைக்குரியது என கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.



மேல் மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற மேல் மாகாணக் கல்வி அதிகாரிகள் சந்திப்பு நிகழ்வில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ், வரலாறு, அழகியல் மற்றும் ஒரு தொழிற்கல்வி பாடம் படிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இவை நீக்கப்பட்டதாக பரப்பப்படும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை. மனித குணங்கள் வளர, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தப் பாடங்கள் அவசியமானவை. அதனால் அனைத்து மாணவர்களுக்கும் இவை கட்டாயமாக வழங்கப்படும்.

அதோடு, கல்வியைஅரசியலாக்கும் நோக்கத்தோடு தவறான தகவல்களை பரப்புவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், கல்வி மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க அனைவரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

நாம் அரசியலில் ஈடுபடலாம். ஆனால் கல்வியையும், குழந்தைகளையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என குறிப்பிட்டுள் ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி-பா-15<br>உயரம்: 5'7"<br>தகைமைஃதொழில்: BBM,Bank officer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15812 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>1இல்சூரிசெவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Counsellar<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15802 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>1இல்செவ்<br>கி-பா-19<br>தகைமை/தொழில்-Civil Engineer (கனடா)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15816 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்-பூராடம்<br>கி-பா-12<br>4இல்சூரிசெவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Dip in English, Tutor<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15803 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி-பா-30 1/2<br>7இல்செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: BA,DO<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15817 | பிறப்பு-2002-இந்து<br>நட்சத்திரம்-சித்திரை<br>கி.பா -58<br>8இல்சூரிசெவ்<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: BSc (following)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15804 |
| பிறப்பு: 1988- இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி-பா-62<br>2இல்செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-A/L,Bank officer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15819 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா -13 1/2<br>2இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் -MA,Electrical Engineer(ஜேர்மனி)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(ஜேர்மன்,சுவிஸ்)<br>தொ.இ: G/15807 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி-பா-12 3/4<br>11இல் சூரிசெவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: Bsc,உதவிநூலகர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15821 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>8இல்செவ்<br>கி.பா - 32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - HNDIT, PVT<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம். விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15809 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 416



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புத்தரும் – ஒரு கொலைகாரனும்!

புத்தர் வாழ்ந்த காலத்திலே ஒரு பயங்கரமான கொலைகாரன் இருந்தானாம்.

கொலை, கொள்ளை இப்படி அவன் ஏகப்பட்ட பாவங்களைச் செய்தவன். அவனுக்கு திடீர் என்று ஒரு நாள் ஒரு ஆசை.

என்ன ஆசை தெரியுமா? புத்தரைப் பார்க்க வேண்டும் இதுதான் அவன் ஆசை இருந்தாலும் எப்படி பார்க்கிறது? இவனைப்பற்றி எல்லோருக்கும் தெரியும்! அதனாலே நேரடியாக போய் புத்தரைப் பார்க்க வேண்டும் என்றால் யாரும் அனுமதிக்கமாட்டார்கள். என்ன செய்வது? யோசனை செய்தான்.

யாருக்கும் தெரியாமல் சுவர் ஏறிக்குதித்து மடத்துக்குள்ளே போய் விடுவோம் என்று முடிவு செய்தான். அதே மாதிரி செய்து விட்டான்.

உள்ளே போய் பார்த்தால் யாரையும் காணவில்லை. ஆள் நடமாட்டமே இல்லை. புத்தர் வெளியே போய் இருந்தார். இவன் ஒருமாதிரியாக அங்கேயும் இங்கேயும் தேடி அலைந்து ஒரு சீடரிடம் மாட்டிக் கொண்டான்

அவர் என்ன சமாச்சாரம் என்று விசாரித்தார்.

"ஐயா நான் திருடுவதற்காக இங்கே வரவில்லை. என்னை தவறாக நினைக்காதீர்கள். புத்தரைப் பார்க்க வந்தேன் வாசல் வழியாக வந்தால் விடமாட்டார்கள். அதனாலே சுவர் ஏறிக்குதித்து வந்தேன். எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம் புத்தரைப் பார்க்க வேண்டும். அவ்வளவு தான்" என்றான்.

உடனே அந்த சீடர் புத்தரிடம் அழைத்துக்கொண்டு போனார். அவருக்கு ரொம்ப ஆச்சரியம். "என்னப்பா எதுக்காக இங்கே வந்தாய்?" என்றார். "புத்தரைப் பார்க்க வந்தேன்!" என்றான்.

"எதற்காக புத்தரைப் பார்க்க வேண்டும்?" என்றார்.

"எனக்கு எல்லாமே வெறுத்துப் போய் விட்டது. என்னுடைய பாவங்களிலேயிருந்து நான் விடுபட வேண்டும். அதற்குப் பிராயச்சித்தமாக சந்நியாசி ஆகிவிட வேண்டும். மக்கள் தொண்டிலே தீவிரமாக ஈடுபட வேண்டும் என்றான். அங்கே இருந்தவர்களுக்கு ரொம்ப வியப்பாக போனது.

இவன் கொலை செய்தவன் கொள்ளையடித்தவன். நிறைய பாவங்கள் செய்தவன். சந்நியாசி ஆவதற்கான தகுதி இவனுக்கு உண்டா?" என்கிற சந்தேகம் வந்தது. சோதிடம் மூலம் அதைப் பார்த்து விடலாம் என்று நினைத்தார்கள். "எந்தப் பிறவியிலேயாவது இவன் ஏதாவது கொஞ்சம் புண்ணியம் பண்ணியிருந்தால் கூட போதும்." என்று நினைத்து சாரிபுத்ரன் ஜாதகம் பார்க்க ஆரம்பித்தார். பிறகுதான் தெரிந்தது. பழைய பிறவியிலே எப்படி இருந்திருக்கிறான். ஒரு துளி கூட இவன் இதைவிட மோசமாக நல்லது செய்ததில்லை! அது மட்டுமில்லை இவனுக்கு விமோசனமே கிடையாது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இப்படியும் ஒரு ஜென்மமா. இவனை உடனடியாக வெளியே துரத்த வேண்டும் என்று சத்தம் வேறு போட்டார்கள்"

இவனுக்கு அதைக் கேட்டதும் கோபம் வரவில்லை ஆனால் மனதுக்கு கஷ்டமாக இருந்தது. புத்தரை நெருங்கக்கூட நமக்குத் தகுதியில்லை நாம் எதற்காக உயிர்வாழ வேண்டும்? என்று தோணியது, தற்கொலை செய்யலாம் என்று சொல்லி வெளி மதில் சுவரிலே தலையை மோதி உடைக்க ஆரம்பித்தான். அந்த சமயம் புத்தர் வெளியே இருந்து உள்ளே வந்து கொண்டிருந்தார். தலையிலே இரத்தத்தோடு இருக்கின்ற இவனைப் பார்த்தார். தடுத்து நிறுத்தினார். புத்தரைப் பார்த்ததும் அவனுக்குப் பரவசம். காலிலே விழுந்து அழுதான். புத்தர் ஆறுதல் சொன்னார்.

என்ன நடந்தது என்று கேட்டார். சொன்னான்!

"ஏன் இவனை விரட்டினீர்கள்?" என்றார். சீடர்கள் விபரத்தை சொன்னார்கள்!

"இவனை ஒரு வாரத்திலே தகுதி உடையவனாக ஆக்கிவிட முடியும்" என்றார் புத்தர்.

சீடர்களுக்கு நம்பிக்கை வரவில்லை!

இவனைப் பார்த்து "நீ என்கூடவே இருந்துகொள் என்றார் புத்தர். இவனுக்கு ரொம்ப ஆனந்தம். ஒரு வாரத்திலே இவன் நல்ல மனிதனாக மாறிவிட்டான். அடக்கம், அமைதி, சாந்தம் எல்லாம் வந்துவிட்டது. சந்தியாசி ஆகின்ற தகுதி வந்துவிட்டது. சீடர்களுக்கு ரொம்ப ஆச்சரியம். எப்படி இந்த அதிசயம் நடந்தது என்றார் சாரிபுத்ரன் இப்ப புத்தர் சொல்கிறார்:

"சாரிபுத்ரா நீ நல்லவன். ஆனால் உனக்கு ஞானமில்லை. பாவங்களின் சுமை என்ன என்பது உனக்குத் தெரியாது! அதன் தவிப்பு எப்படி இருக்கும் என்பது உனக்குத் தெரியாது.

உனக்கு அந்த அனுபவம் இல்லை அது மட்டுமில்லை. நீ ஜோசியத்திலே கடந்த காலத்தை மட்டும் தான் பார்த்தாய்!

இறந்த காலம் என்பது இறந்து போன காலம் அது என்னத்திற்கு ஆகும்?

எதிர்காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். அதை உருவாக்க வேண்டும். தன்னுடைய பாவச்சுமையிலேயிருந்து இறந்தகாலத்திலேயிருந்து விடுபட இவன் தவிப்புதான் இவனுக்கு விடுதலையைத் தேடிக் கொடுத்திருக்கிறது என்றார் புத்தர்.

நல்லவர்களைவிட, குற்றவாளிகள்தான் சீக்கிரமாக பக்குவ நிலையை அடைய முடியும்! தம்மை நல்லவர்களாக நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு. விமோசனமும் பரிபக்குவமும் சுலபமாக சித்திகொள்வதில்லை! இதை கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்! நான் ஒரு சின்ன பையனைப் பார்த்து கேட்டேன். "நாம் செய்கின்ற பாவங்களை எல்லாம் கடவுள் மன்னிக்க வேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும்.?" என்றேன்!

சார் "கடவுள் நம் பாவங்களை மன்னிக்க வேண்டும். முதலிலே பாவங்களைச் செய்ய வேண்டும். அப்போது தானே அவராலே அதை மன்னிக்க முடியும்"! என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காயில் 40 ஆசிரியர்கள் கடமைகளை பொறுப்பேற்கவில்லை

## ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றிய 44ஆசிரியர்கள் பணியிடமாற்றம் பெற்று வெளிவலயங்களுக்கு சேவையாற்றச் சென்றுள்ளனர். இதன்மூலம் துணுக்காய் கல்விவலயத்தில் ஏற்பட்ட 44 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு வெளிவலயங்களில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு பணியிடமாற்றம் வழங்கப்பட்டுள்ளபோதும் நான்கு ஆசிரியர்கள் மாத்திரமே இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் என ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேசஅபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. குறித்த கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில்கலந்துரையாடப்பட்டபோதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்தில் பணியாற்றிய 44பேர் இங்கிருந்து பணியிட மாற்றம்பெற்று சென்றிருக்கின்ற நிலையில், வெளிவலயங்களிலிருந்து 4ஆசிரியர்கள் மாத்திரமே துணுக்காய் வலயத்திற்கு வருகைதந்துள்ளனர். 40ஆசிரியர்கள் இதுவரை துணுக்காய் வலயத்திற்கு வருகைதந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை.

இவ்வாறு தமது கடமைகளை இதுவரை பொறுப் பேற்காத ஆசிரியர்களுக்கெதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஆசிரியர் நியமனங்கள் திறந்த போட்டிப்பரீட்சை முறையில் இடம்பெறுவதால் தான் இத்தகைய சிக்கல் நிலைமைகள் காணப்படுகின்றன. மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்களை மேற்கொண்டால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். எனவே இனி மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்களை மேற்கொள்வதற்கு நாம் தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

துணுக்காய் வலயத்தில் ஏற்கனவே 160 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றது. தற்போது 40ஆசிரியர்கள் கடமைகளைப் பெறுப்பேற்காதநிலையில் துணுக்காய் வலயத்தில் ஆசிரியர்களின் வெற்றிடங்கள் 200ஆக உயர்வடைந்திருக்கின்றது. இதனால் துணுக்காய் வலயத்தினுடைய கற்றல் செயற்பாடுகள் இன்னும் மோசமடைவதற்கான நிலையே ஏற்பட்டிருக்கின்றது.



எமது பிள்ளைகளும் கல்வி கற்கவேண்டும். வன்னி என்றால் ஒதுக்கிவிடுகின்ற நிலைமை, முல்லைத்தீவு மாவட்டம் என்றால் ஒதுக்கிவிடுகின்ற நிலைமை, துணுக்காய் என்றால் ஒதுக்கிவிடுகின்ற நிலமை இருக்கக் கூடாது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார். (8-299)

# மன்னார் நகர சபை அமர்வில்

## மோதிக்கொண்ட முன்னாள், இந்நாள் முதல்வர்கள்

(மன்னார்)


மன்னார் நகர சபையின் ஒத்திவைக்கப்பட்ட அமர்வு மீண்டும் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற போது மன்னார் நகர சபையின் முன்னாள் முதல்வர், தற்போதைய நகர சபையின் உறுப்பினர் மற்றும் மன்னார் நகர முதல்வர் ஆகியோருக்கு கிடையில் சபை அமர்வின் போது நாவடக்கம் இன்றி இருவரும் மோதிக்கொண்டனர்.

மன்னார் நகர சபையின் கன்னி அமர்வு கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது சபையில் தொடர்ந்தும் உறுப்பினர்களுக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு வந்த நிலையில் சபை முதல்வரினால் சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த அமர்வின் தொடர்ச்சியாக நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபை முதல்வரினால் மீண்டும் சபை கூட்டப்பட்டது.

இதன் போது அனைத்து உறுப்பினர்களும் பங்கு பற்றி இருந்தனர்.இதன் போது மன்னார் நகர சபையின் முன்னாள் முதல்வர், தற்போதைய நகர சபையின் உறுப்பினர் மற்றும் மன்னார் நகர முதல்வர் ஆகியோருக்குகிடையில் தொடர்ச்சியாக கருத்து முரண்பாடு ஏற்பட்டு வாய்த் தர்க்கமாக மாறியது.குறித்த இருவரும் நா அடக்கம் இன்றி மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வந்தனர்.

இந்த நிலையில் புதிய செயலாளருக்கு காசோலையில் ஒப்பமிடுதல், மக்களினால் தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி, ஒப்பந்த அடிப்படை மற்றும் நிரந்தரமாக கடமையாற்றுகின்ற ஊழியர்களின் சம்பளம் வழங்குதல் ஆகியவற்றுக்கான அனுமதி கோரப்பட்ட நிலையில் சபையினால் அனுமதி வழங்கப்பட்டு சபை அமர்வு முடிவடைந்தது. (8-285)



வவுனியா தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள நவாலியூர் சோமசுந்தரப் புலவர் சிலையடியில் ஆடிப்பிறப்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாநகரசபையின் பங்களிப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் சோமசுந்தரபுலவரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

# கிளி, முல்லை மாவட்டங்களில்

## 3 இலட்சத்து 20 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு

## நெல் சந்தைப்படுத்தல் சபை

(தருமபுரம்)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரை 3 இலட்சத்து 20 ஆயிரம் கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடபிராந்திய பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில் சிறுபோக அறுவடை நெல்லை விவசாயிகளிடம் இருந்து நெல் சந்தைப்படுத்தல் சபை நிர்ணய விலைக்கு அமைய கொள்வனவு செய்கின்ற நிலையில் வடமாகாணத்திலும் கொள்வனவிற்காக களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதுவரை 3 இலட்சத்து 20 ஆயிரம் கிலோகிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வருடம் அரசாங்கத்தின் நடவடிக்கையாக ஈர நெல்லும் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று முகவராக இணைந்து ஈர நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து உலர வைத்து திரும்ப ஒப்படைக்க வேண்டும்.ஈர நெல் நாடு ஒரு கிலோ 102ரூபாவாகவும், சம்பா 105ரூபாவாகவும், கீரிச்சம்பா 112ரூபாவாகவும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்து உலர வைத்து மீள வழங்கும் போது, கூலி மற்றும் போக்குவரத்து கொடுப்பனவும் கிடைக்கின்றது. எனவே சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் விண்ணப்பபடிவத்தை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவித்தார். (8-316)

# வவுனியா - கூமாங்குளம் வன்முறை; கைதான இருவரும் விளக்கமறியலில்

(நெளுக்குளம்)

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் விழுந்து மரணமடைந்திருந்தார்.

குறித்த மரணத்திற்கு அந்த பகுதியில் பயணித்த போக்குவரத்து பொலிஸாரே காரணம் எனத் தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்நிலையில், மரணித்தவர் மாரடைப்பு காரணமாக மரணித்ததாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் வாக்குமூலம் பெறுவதற்காக இருவரை அழைத்திருந்தனர். அவர்களிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்களை கைது செய்து வவுனியா நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்கள் இருவரையும் எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதேவேளை குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் சில நபர்களை கைது செய்யு மாறும் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (8-250)

# நெல்லுக்கான நிர்ணய விலையை தீர்மானித்து கொள்வனவு செய்கின்றமையால் பாதிப்பில்லை

## விவசாயிகள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணை மடுக்குளம்,கல் மடுக்குளம்,அக்கராயன் குளம் உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன குளங்கள்,சிறிய நீர்ப்பாசன குளங்கள் என்பன உள்ளடங்கலாக சுமார் 35 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை உரிய விலைக்கு சந்தைப்படுத்தக்கூடிய சூழல் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர் குறிப்பாக அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் தனியார் நெல்லை கொள்வனவு செய்து வருவதுடன் உலர்ந்த நெல்லினை நெல் சந்தைப்படுத்தும் சபையும் கொள்வனவு செய்து வருகின்றது. அத்துடன் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் ஈர நெல்லினையும் உடனடியாக சந்தைப் படுத்தக் கூடிய நிலை காணப் படுவதாகவும் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்

அத்துடன் விவசாயிகளுக்கான அரச மானியத்தினையும் உரிய காலத்தில் வழங்கியிருந்தது அதேபோல அறுவடை செய்கின்ற நிலையில் உரிய காலத்திலே நெல்லை சந்தைப்படுத்துவதற்குரிய சகல வசதி வாய்ப்புகளையும் இந்த அரசாங்கம் செய்திருக்கின்றது என்று சுட்டிக்காட்டி உள்ளனர். (8-315)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 824



"நீ மட்டும் என்ன? நானுங் கூடத்தான் நம்பவில்லை. நம்பியிருந்தால் இந்தக் கடம்பூர் மாளிகைக்கு விருந்தாளியாக வந்திருப்பேனா?" என்று கூறிக் கரிகாலன் மீண்டும் எதையோ நினைத்துக் கொண்டவன் போல சிரித்தான்.

கடம்பூர் சம்புவரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "கோமகனே! திருக்கோவலூர் மலையமான் குலத்துக்கும் எங்கள் குலத்துக்கும் நீண்ட கால விரோதம் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கும்!" என்றார்.

"தெரியாமல் என்ன? அந்த விரோதத்தைப் பற்றி சங்கப் புலவர்கள் பாடியிருக்கிறார்களே? கொல்லி மலை வல்வில் ஓரியை மலையமான் திருமுடிக்காரி சண்டையில் கொன்றான். வல்வில் ஓரியின் வம்சத்தில் நீங்கள் வந்தவர்கள் ஆகையால் அந்த விரோதத்தை இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்"

"கோமகனே! வல்வில் ஓரியின் சாவுக்கு உடனே பழி வாங்கப்பட்டது. வல்வில் ஓரியின் உறவினனாகிய அதியமான் நெடுமானஞ்சி திருக்கோவலூர் மீது படையெடுத்துச் சென்று அந்த ஊரையும் அழித்தான் மலையமானுடைய முள்ளூர் மலைக் கோட்டையையும் தரைமட்டமாக்கினான்"

"சம்புவரையரே! அதியமான் மட்டும் தனியாக அந்தக் காரியத்தைச் செய்து விடவில்லை. என் முன்னோனாகிய சோழன் கிள்ளி வளவனுடைய உதவியைக் கொண்டு தான் மலையமான் மீது அதியமான் வெற்றி அடைந்தான். அந்தப் பழைய கதையெல்லாம் இப்போது எதற்கு?"

"நாங்கள் மறந்து விட்டாலும், மலையமான் மறப்பதில்லை. ஏதாவது எங்கள் பேரில் அவன் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறான்"

"நான்தான் சொன்னேனே? கிழவருக்கு வயதாகி விட்டது. ஆகையால் புத்தியும் தடுமாறுகிறது. நான் இங்கே இருக்கும்போது எனக்கு ஆபத்து ஒன்றும் வராமல் பாதுகாப்பதற்காக அவர் ஒரு பெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு வராமல் இருக்க வேண்டுமே என்று கூட எனக்குக் கொஞ்சம் கவலையாயிருக்கிறது."

"இளவரசே! அப்படி ஏதேனும் தங்களுக்குச் சந்தேகம் இருந்தால்" என்று சம்புவரையர் தடுமாறினார்.

"எனக்குச் சந்தேகமா? இல்லவே இல்லை. மலையமானோடு எங்கள் உறவு இரண்டு தலைமுறையாகத்தான். பழுவேட்டரையரோடு எங்கள் உறவு ஆறு தலைமுறையாகத் தொடர்ந்து வந்திருக்கிறது.

பழுவூர் அரசரே இங்கே வந்திருக்கிறார். அவர் சோழ குலத்துக்கு விரோதமாக ஏதும் செய்வார் என்று நினைக்க எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா?" என்று கரிகாலன் கூறிப் பைத்தியச் சிரிப்புச் சிரித்தான்.

பழுவேட்டரையர் கம்பீரமான குரலில், "இளவரசே! சோழ குலத்துக்கு விரோதமாக நான் எதுவும் செய்ய மாட்டேன் இது சத்தியம். தர்ம நியாயத்துக்கும் விரோதமாகவும் எதுவும் எப்பொழுதும் செய்ய மாட்டேன் இது இரு மடங்கு சத்தியம்" என்றார்.

"ஆமாம், ஆமாம்! தர்ம நியாயம் என்பதாக ஒன்று இருக்கத்தான் இருக்கிறது. அதைப் பற்றித் தங்களிடம் பேசித் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன். வேட்டையாடும் நேரமும், கூத்துப் பார்க்கும் நேரமும் போக ஒழிந்த நேரத்தில் சற்று தர்ம நியாயத்தையும் பற்றிப் பேசலாம்! சம்புவரையரே!

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மன்னர் தேவை



(நேற்றைய தொடர்ச்சி)

மந்திரியாரே என்ன சொல்கிறீர்கள். திடீரென்று யாரோ ஒரு இளைஞனைக் கூட்டிக் கொண்டு வந்து இவனை அரசனாக்க வேண்டும் என்கிறீர்களே? என்று வருத்தத்துடன் கேட்டார்.

மன்னா வருத்தப்படாதீர்கள், இந்த இளைஞன் வேறு யாருமல்ல உங்களுடைய உண்மையான வாரிசு என்று சொல்ல, மந்திரியாரே என்ன சொல்கிறீர்கள் என்று அதிர்ச்சியுடன் கேட்டார் மன்னர்.

ஆம் மன்னா, நீங்கள் இளவரசரைப் பெற்றெடுக்க அந்த வைத்தியரின் இல்லத்துக்கு சென்றீர்கள் அல்லவா, அன்று அந்த வைத்தியப் பெண் வேண்டுமென்றே அவள் மகள் பெற்றெடுத்த குழந்தையை ராணி பெற்றெடுத்த குழந்தை என்று கொடுத்து விட்டாள். தனது பேரன் நாட்டை ஆள வேண்டும் என்ற ஆசையினால் அந்தக் காரியத்தை செய்திருக்கிறாள். இது நீங்கள் உங்கள் மகனை பெற்றெடுத்த கதையை சொன்ன பின் தான் மனதுக்குள் இப்படி நடந்திருக்கலாமோ என்ற சந்தேகம் வந்தது. நேற்று அந்த ஊருக்குப் போய் அந்த வைத்தியப் பெண்ணிடம் விசாரித்ததில் எல்லா உண்மைகளையும் சொல்லி விட்டாள். கூடவே அவள் வளர்த்து வந்த அந்த இளைஞனையும் என்னுடன் அனுப்பி வைத்தாள்.

மன்னர் பெருமூச்சுடன் இப்பொழுது தான் எனக்கு நிம்மதி வந்தது மந்திரியாரே. உங்களுக்கு மிக்க நன்றி. நான் என் மகனை மீண்டும் ஒரு முறை பார்க்கவேண்டும் அதற்கு ஏற்பாடுகள் செய்வீர்களா? கொஞ்சம் பொறுங்கள் மன்னா, அந்த இளைஞனுக்கு அரசராகக் கூடிய தகுதிகளை நன்கு கற்றுக்கொடுத்து அதன் பின்னால் உங்கள் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறோம். அதன் பின் நீங்கள் அவனுக்கு முடிசூட்டி மகிழலாம். அதுவரை சற்று பொறுமை காக்கவும். மிகவும் நல்லது மந்திரியாரே. எனது மகனே ஆனாலும் அவனுக்கு அரசர் ஆவதற்கு தகுதி இருந்தால் தான் மன்னராக ஆக முடியும். நீங்கள் மேற்கொண்டு ஏற்பாடுகளை செய்யுங்கள். நான் காத்திருக்கிறேன்.

மன்னா தங்களிடம் ஒரு கேள்வி, இதுவரை உங்கள் மகனாக நினைத்து வளர்த்து வருகிறீர்களே, அந்த இளைஞனை வெறுத்து விடுவீர்களா?

என்ன சொல்கிறீர்கள் மந்திரியாரே, இதுவரை மகனாக நினைத்து வளர்த்து விட்டு மகனில்லை என்பதற்காக அவனை வெறுக்க முடியுமா? அவனும் என் மகன் தான். அவனை இந்த உலகமே போற்றும் ஒரு வைத்தியனாக ஆக்க வேண்டும் என்று மனதார விரும்புகிறேன்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர்களிடமிருந்து கற்பதை விட கற்றுக் கொண்டிருப்பவர்களிடம் கற்றுக் கொள்.

– காரல் மார்க்ஸ்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## சண்டை பிடிப்பதற்காக கூட்டம் போடும் இனமாக ...

எங்கள் மண்ணில் நடக்கின்ற சில நிகழ்வுகளை நினைக்கும்போது இத்துணை கீழ் நிலை கொண்டவர்களா? நாம் என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு நம்மவர்கள் மிகவும் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர்.

இதற்கு எங்கள் பிரதேசங்களில் நடைபெறுகின்ற கூட்டங்கள் நல்ல உதாரணங்களாகும்.

ஆம், சனசமூக நிலையக் கூட்டங்கள் முதல் உள்ளூராட்சி அமைப்புகளின் சபைக் கூட்டங்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் வரை சண்டையும் சச்சரவுமே மேலாடி நிற்கின்றன.

கூட்டங்கள் என்று ஆரம்பித்தாலே பேரிகை முழங்கத் தொடங்கிவிடும். ஒருவரை ஒருவர் மாறி மாறிக் குற்றஞ்சாட்டி எப்படியும் அந்த சபை இரண்டாக உடையும்.

பிறகென்ன சட்டத்தரணிகளைச் சந்திப்பது. வழக்கைத் தொடங்குவது என்பதாக நிலைமை மாறும்.

அதுபோலத்தான் உள்ளூராட்சி சபைக் கூட்டங்கள் நடந்தால் போதும், தேவையில்லாத விடயங்களைக் கதைத்து நேரம் வீணடிக்கப்படும்.

அபிவிருத்தி தொடர்பில் – பொதுமக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய சேவைகள் தொடர்பில் எதுவுமே ஆராயாமல், அந்தக் கூட்டம் சண்டை சச்சரவோடு முடிந்து போகும்.

இதுதான் என்றால் இல்லை. இப்போது அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் என எங்கும் கூப்பாடுதான்.

கடவுளே! பேச வேண்டிய விடயங்கள் எதுவும் பேசப்படுவதில்லை.

கூட்டத்தில் சண்டை பிடிப்பது எப்படி என்ற தயார்படுத்தலுடன் கூட்டத்துக்கு வருகின்றவர்களே அதிகம் எனலாம்.

கூட்டம் தொடங்கிவிட்டால் போதும், ஏவுகணை எந்தப் பக்கத்தால் வெடிக்கும் என்று தெரியாத அளவில் நிலைமை இருக்கும்.

ஆக, கூட்டம் பிணக்குகளோடும் சண்டை சச்சரவுகளோடும் நின்று போகும். என்ன செய் வது எத்தனை உயர் பண்பாளர்கள் இருந்த எங்கள் தமிழர் தாயகம் இன்று கந்தறுந்து காவடி எடுக்கிறது.

கூட்டம் என்றாலே சண்டை என்று பொருள் கொள்ளுமளவில் கூட்டங்களின் நிலைமை அமைகிறது. இத்தகைய கூட்டங்களைப் பார்க்கின்ற எங்கள் இளம் சமூகம், கூட்டம் என்றால் இப்படித்தான் இருக்கும். பண்புடைமைச் சொற்களைத் தவிர்க்க வேண்டும். சண்டை பிடிக்க வேண்டும் என்ற கருத்தியலை அவர்கள் உள்வாங்கிக் கொள்வர்.

எனவே உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களைச் செம்மையாக நடத்துங்கள். கூட்டங்களில் விரசமாகக் கதைத்து உங்களின் குண இயல்பை பகிரங்கப்படுத்தாதீர்கள்.

பக்குவத்தை – பண்புடைமையைப் பேணுங்கள். அபிவிருத்தி மற்றும் மக்களின் அடிப்படைத் தேவை தொடர்பில் ஆதாரபூர்வமாகக் கதையுங்கள். தீர்மானத்தை எடுங்கள். அதை அமுலாக்குங்கள். இதைச் செய்யத் தவறுவீர்களாயின், உங்கள் சண்டை கொலையில் தான் முடியும். கவனம்.

# சர்ச்சைக்குரிய கொள்கலன் விடுவிப்பு அமைச்சர் பிமலைக் கைது செய்யுங்கள்

## முன்னாள் எம்.பி உதய கம்மன்பில

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய கொள்கலன் விடுவிப்புத் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவை கைது செய்யுமாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று வியாழக்கிழமை (17) முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு கடந்த மாதம் 2 ஆம் திகதி முறைப்பாடளித்தோம். ஆனால் இதுவரையில் அந்த முறைப்பாடு குறித்து எவ்வித விசாரணைகளையும் ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை.

இந்தக் கொள்கலன்கள் விடுவிப்புத் தொடர்பில் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் பிரதி அமைச்சர் ஜனித் ருவான் கொடித்துவக்கு ஆகியோர் இந்தக் கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் தாம் நன்கு அறிவோம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். ஆனால் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னர் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கருத்துக்கு மாற்றீடாக தற்போது பேசுகிறார்கள்.

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பணிப்புக்கு அமைவாகவே இந்த 323 கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டதாக சுங்கத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் சீவலி அருட்கொட குறிப்பிட்டார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முறையாகச் செயற்படுமாயின் பிமல் ரத்நாயக்கவை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

பழைய திருடர்களை பிடிப்பதில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வேலைப்பழுவாக இருப்பதால் புதிய திருடர்களை ஆணைக்குழு அலட்சியம் செய்கிறது. சோளம் வழங்கியவர்கள், கெரம் போட் விநியோகித்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் 323 கொள்கலன்களை விடுவித்தவர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட நிதி இழப்புத் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தினார். (ம-7)

# அமெரிக்காவின் வரி தொடர்பில் இணங்கிய விடயங்களை வெளியிட முடியாது

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த

அமெரிக்காவின் பரஸ்பர வரிகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இன்னும் முடிவடையாததால் அமெரிக்காவுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட விபரங்களை வெளியிட முடியாது என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இதற்கு ஒரு தொழில்நுட்ப ரீதியாகத் தீர்வு உள்ளது. இது தொடர்பான இரண்டு நாடுகள் மட்டுமே அந்த விடயங்களை முன்வைக்கின்றன. அந்த இரண்டு நாடுகளும் மட்டுமே இறுதி ஒப்பந்தத்தை எட்டின. விவாதிக்கப்படும் விடயங்களில் இறுதி உடன்பாடு எட்டப்படாமல் அவற்றை வெளியிடக் கூடாது. ராஜதந்திரம் என்பது இதுதான்.

நாம் அனைவரும் சேர்ந்து அதை "non disclosure exclusivity" என்று அழைக்கிறோம். அப்படியானால், ஒப்பந்தம் எட்டப்பட்ட பிறகுதான் இது முழுமையான ராஜதந்திர செயற்பாடாக இருக்கும். அமெரிக்கா இப்போது ஆயிரத்து 161 பொருட்களுக்காக எங்களுக்கு சலுகைகளை வழங்கியுள்ளது. நாங்கள் அங்கு ஏற்றுமதி செய்கிறோம். இந்த ஆயிரத்து 161 பொருட்களில் 42 விவசாயப் பொருட்களாகும். இவற்றில் ஆடைகளும் உள்ளடங்கும்.

அவர்கள் 80% வீதமான பொருட்களுக்கு 0% தருவதாக ஒப்புக் கொண்டுள்ளனர். அதாவது வகையின் 70% முதல் 80% வீதமானவை. அதற்கு முடிவு எட்டப்படாததால் நாங்கள் ஒவ்வொன்றாகச் சொல்லவில்லை. ஏற்றுமதி செய்யும்போது 0% கொடுங்கள்.

நாங்கள் அவர்களிடமிருந்து இறக்குமதி செய்தாலும் அவர்களால் எங்களுக்கு 0% வீதம் தர முடியுமா என்பது பற்றி நாங்கள் கலந்துரையாடி வருகிறோம். இறக்குமதியைப் பொறுத்தவரை, அது சுமார் 300 மில்லியன் என்பதால் தற்போது அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 0% முதல் 20% வீத வரை வரி வரம்பு உள்ளது.

எனவே அவற்றில் சிலவற்றை நாம் சிறிது குறைத்தால், அரசாங்கத்திற்கு பெரிய வருமான இழப்பு ஏற்படாது என்றார். (ம-7)

# இலங்கையின் பிறப்பு விகிதம் கணிசமானளவு குறைவு

## ஐ.நா மக்கள் தொகை நிதியம்

(கொழும்பு)

இலங்கையின் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. நாட்டின் தற்போதைய பிறப்பு விகிதம் 1.9 ஆக உள்ளது. எனினும் இந்த எண்ணிக்கை 2.1 ஆக இருக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள்தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை இளைஞர்களுடனான கலந்துரையாடல்களில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானோர் ஒரு குடும்பத்தைத் தொடங்க விரும்புவதாகக் கூறினர். ஆனால் பொருளாதார சிக்கல்கள் இதற்கு தடையாக இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளில் இலங்கையில் வாழ்க்கைச் செலவு இரட்டிப்பாகியுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள்தொகை நிதியத்தின் பிரதிநிதி கூலி அடெனியி தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக, வீட்டுவசதி மற்றும் உணவுக்கான செலவும் அதிகரித்துள்ளது, மேலும் ஒரு குடும்பத்தைத் தொடங்க நினைத்த இளைஞர்கள் அதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் குழந்தை பிறக்கும் வயதுடையவர்களில் சுமார் 20 வீதம் பேர் தாங்கள் விரும்பும் குழந்தைகளின் எண்ணிக்கையைப் பெற முடியாது என்று நம்புவதாக ஐ.நா அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. (ம-7)

# தலையாழி ஞானவைரவராலய தேய்பிறை அட்டமி உற்சவம்

யாழ்ப்பாணம் கொக்குவில் தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய தேய்பிறை அட்டமி உற்சவமானது இன்று வெள்ளிக்கிழமை (18) மாலை பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

ஞான வைரவப் பெருமானுக்கு விஷேட அபிஷேகங்கள் இடம் பெற்று வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து சகஸ்ர நாம அர்ச்சனை இடம் பெறவுள்ளது

இதன் போது இன்னல்கள் நீங்க நெய் தீபமிட்டு அடியவர்கள் வழிபாடாற்றி சாமுண்டா தேவி சமேத ஞானவைரவரது திருவருளைப் பெற்றிட முடியும் என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறியதந்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 16

சொக்கன்

உண்மையில் ரஃபி எய்டன் மொசாட் ஏஜெண்ட் இல்லை ஷபக் எனப்படும் இஸ்ரேலிய உள்நாட்டு உளவுத்துறையில் முக்கியப் பொறுப்பு வகித்துக் கொண்டிருந்தவர் அவர்.

ஷபக்கா? இது என்ன புதுசா இருக்கே? மொசாட் இருக்க ஷபக் எதற்கு?

இது எல்லா நாடுகளிலும் உள்ள வழக்கம் தான். பெரும்பாலானோர் உள் விவகாரங்களுக்கு ஒன்று வெளி விவகாரங்களுக்கு ஒன்று என இரண்டு தனித்தனி உளவுத் துறைகளை வைத்திருப்பார்கள்.

உதாரணமாக அமெரிக்காவின் உள் உளவுத்துறை FBI, வெளி உளவுத்துறை CIA அது போல இஸ்ரேலில் ஷபக் மற்றும் மொசாட்!

மொசாட் போலவே ஷபக் என்பதும் செல்லப் பெயர்தான் அதன் முழு வடிவம் Sherut ha- Bitachon ha- Klali ஹீப்ரு மொழியில் இதன் அர்த்தம் பொதுப் பாதுகாப்புச் சேவை.

பாதுகாப்பு என்று சொன்னாலும் ஷபக் ஏஜெண்ட்களின் முக்கியமான வேலை உள்ளூரில் வம்பு பண்ணக் கூடிய நபர்களைக் கவனிப்பது. இவர்களுடைய தினசரி நடவடிக்கைகள் என்னென்ன, சந்தேகத்துக்கு இடமாக ஏதாவது ரகசிய சில்மிஷங்கள் செய்கிறார்களா, யார் யாரெல்லாம் இவர்களுக்குக் கூட்டாளிகள் என்று கவனித்து ரிப்போர்ட் எழுதுவது.

இதோடு ஒப்பிடும் போது மொசாட்டின் எல்லைகள் மிகவும் பரந்து விரிந்தவை. இஸ்ரேலுக்கு வெளியிலிருந்து வருகிற விவகாரங்களைக் கவனிப்பது தேவையான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு இஸ்ரேலுக்கு எதிராக யாரும் வாலாட்டாமல் பார்த்துக்கொள்வது இவர்களுடைய வேலை.



சட்டப்படி பார்த்தால் ஒரு நாட்டின் உள், வெளி உளவுத் துறைகளின் பொறுப்புகள் முற்றிலும் வேறு பட்டவை ஒன்றுடன் ஒன்று குறுக்கிடவே கூடாது.

ஆனால் எதார்த்தத்தில் அப்படி இருக்காது. அவ்வப்போது இந்த இரண்டு குழுக்களும் சேர்ந்து செயற்பட்டால் தான் பல எதிர் நடவடிக்கைகளை முறியடிக்கமுடியும்.

இப்படித்தான் ஷபக்கைச் சேர்ந்த ரஃபி எய்டன் மொசாட் ஏஜெண்ட்களுடன் பழக ஆரம்பித்தார். மெசாட் மேலதிகாரிகள் அவருடைய திறமையைக் கவனித்துக் குறித்துக்கொண்டார்கள்.

இந்த நேரத்தில் அர்ஜென்டினாவில் இருந்து அடால்ஃப் ஐக்மெனனைக் கடத்துவதற்கான திட்டம் தயாரானது. மிகவும் ரகசியமான ஆபத்தான இந்த வேலையைச் செய்து முடிப்பதற்குச் சரியான ஆள் யார் என்று தேட ஆரம்பித்தது மொசாட்

உடனே விஜயகாந்த் படங்களில் வருவது போல இதைச் செய்வதற்கு ஒரே ஒருதரால தான் முடியும் என்று யார் வசனம் பேசினார்களோ, ரஃபி எய்டன் தேர்வு செய்யப்பட்டார். மொத்தப் பொறுப்பையும் அவர் கையில் ஒப்படைத்து அர்ஜென்டினாவுக்கு அனுப்பிவைத்தார்கள்.

சிஃப் அடுத்த பஸ் வருது ட்ரைவரின் குரல் கேட்ட ரஃபி எய்டன் தீவிர சிந்தனையிலிருந்து விடுபட்டார். மீண்டும் பேருந்து நிறுத்தத்தைக் கவனிக் ஆரம்பித்தார்.

இந்தமுறை அவருடைய உதடுகளில் ஒரு சின்னப் புன்னகை அரும்பியது. அடால்ஃப் ஐக்மென் பேருந்துப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்.

ஒருகாலத்தில் இலட்சக் கணக்கான யூதர்களின் மரண சாசனத்தில் கையெழுத்துப் போட்ட ஐக்மென் வயது காரணமாக அவருடைய உடல் தளர்ந்திருந்தாலும் ரஃபி எய்டனுக்கு அவர் மேல் துளி பரிதாபம் வரவில்லை.

எல்லாரும் ரெடியா? யெஸ் சீஃப்

அடால்ஃப் ஐக்மென் நடக்க ஆரம்பித்தார். அவரைப் பின்தொடர்ந்து கொண்டிருந்த மொசாட் கார் லேசாக வேகம் பிடித்து ஐக்மெனை உரசுவது போல் வந்து நின்றது. சட்டென்று கதவைத் திறந்துகொண்டு ஒருவர் இறங்கினார்.

ஐக்மெனுக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. கொஞ்சம் ஒதுங்கிப் போக முயற்சி செய்தார்.

அதற்குள் காரிலிருந்து இறங்கியவர் நிற்க முடியாமல் தடுமாறினார். கார் அவருடைய ஷூ லேஸ் அவிழ்ந்து விட்டது.

ரஃபி எய்டனுக்கு டென்ஷன் எகிறியது. எத்தனை மாதமாகக் கஷ்டப்பட்டுத் தயார் செய்த திட்டம் இப்போது ஒரு சின்ன ஷூ லேஸ் பிரச்சினை யால் மொத்தமும் பாழாகி விடுமோ?

ம்ஹூம் விடக் கூடாது! சட்டென்று கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்தார் ரஃபி எய்டன்.

இதற்குள் நடப்பதை ஓரளவு ஊகித்துக் கொண்டிருந்த ஐக்மென் அங்கிருந்து விலகி ஓட முயன்றார் ஆனால் ரஃபி எய்டன் அவரைப் பாய்ந்து பிடித்துவிட்டார்.

அந்த வயதிலும் ஐக்மென் பலமாகத் திமிறினார். ஆனால் ரஃபியின் வெறித்தனமான உடும்புப் பிடியிலிருந்து அவரால் தப்பிக்க முடியவில்லை. அதே நேரம் மொசாட் குழுவிலிருந்து இன்னொருவரும் ஐக்மென்மேல் பாய எல்லோரும் மொத்தமாகத் தெருவில் விழுந்து புரண்டார்கள்.

சில விநாடிகளில் ஐக்மென் காருக்குள் பிடித்துத் திணிக்கப்பட்டார். யாரோ அவர் மீது ஏறி உட்கார்ந்தார்கள் சத்தம் போடாதபடி வாயைப் பொத்தினார்கள். அவ்வளவு நேரம் தேர் போல ஊர்ந்து கொண்டிருந்த கார் இப்போது வேகம் பிடித்துப் பறக்க ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் அவர் பக்கத்திலிருந்து ஒரு மொசாட் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அடால்ஃப் ஐக்மெனை உள்ளே தள்ளிய ரஃபி எய்டன் ட்ரெஸ்ஸையெல்லாம் கழட்டு என்று சைகையால் உத்தரவிட்டார்.

ஐக்மெனுக்கு என்ன நடக்கிறது என்று ஒரு மாதிரியாக விளங்கியிருக்கவேண்டும். இனிமேல் தப்பிக்க முடியாது என்றுபுரிந்துகொண்டிருந்த அவர் மறு பேச்சில்லாமல் தன் உடைகளைக் கழற்றத் தொடங்கினார்.

முழு நிர்வாணமாக நின்ற அடால்ஃப் ஐக்மெனின் உயரம் எடை தலையின் சுற்றளவு, கை, கால் நீளங்கள், மற்ற விபரங்களைக் குறித்துக்கொண்டார் ரஃபி எய்டன். அவற்றைத் தன்னுடைய ஃபைலில் இருந்த அளவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தார் எல்லாம் கச்சிதமாக இருந்தது. ரஃபி எய்டன் கண்ணசைத்ததும் மற்ற ஏஜென்ட்கள் ஐக்மெனை ஒரு கட்டிலில் தூக்கிப் போட்டார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் மோதி...

யத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இரவு தபால் புகையிரத்தில் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தற்கொலையா? அல்லது விபத்தா? என்பது தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,250)

## முல்லைத்தீவு...

பட்டுள்ளது.

இதில் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத் தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## யாழ்.மாவட்ட...

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைலையில் இணைத் தலைவர் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் நேற்று வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலாகவே இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அர்ச்சுனா இராமநாதன், எஸ்.ஸ்ரீபவானந்தராசா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், க.இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் வீதி அவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு, போக்குவரத்து, மின்சாரம், வீடமைப்பு, சட்டம் ஒழுங்கு, கடற்றொழில், விவசாயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பல்வேறு விடயங்களுக்கு நக்கல், நையாண்டி கலந்து பதிலளித்துக் கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

அதையடுத்துக் கூட்ட முடிவின் போது, அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் "யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பேசப்பட்டமை குறைவு. தேவையற்ற விடயங்கள் பேசப்பட்டதே அதிகம். இப்படியான கூட்டம் இதுவே கடைசியாக இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார். (ம-7)

## கே.கே.எஸ்...

ததாக அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது காங்கேசன்துறை -நாகபட்டினம் இடையே கப்பல் வழியாக போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளுக்கு இருவழி கட்டணமாக 28 ஆயிரத்து முந்நூறு ரூபாயும், காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினம் செல்வதற்கு ஒருவழி கட்டணமாக 12 ஆயிரத்து முந்நூறு ரூபாயும், நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன் துறை வருவதற்கு ஒரு வழி கட்டணமாக 16 ஆயிரம் ரூபாயும் அறவிடப்படுகிறது.

இதேவேளை நல்லூர் திருவிழாவினை முன்னிட்டு பயணிகளுக்காக விசேட சலுகைகளை வழங்கவுள்ளோம். அந்தச் சலுகைகள் தொடர்பாக விரைவில் அறிவிப்போம்.

பயணிகள் கப்பல் சேவையானது வழமைபோல செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஆறு நாட்களும் சிறப்பான சேவையில் ஈடுபட்டு வருகின்றது. கப்பல் சேவையில் ஏதாவது மாற்றங்கள் நிகழுமிடத்து அவை குறித்து நாங்கள் முற்கூட்டிய அறிவிப்பு வழங்குவோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## பலாலி இராஜே...

உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி பலாலியில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டது.

கடந்த 35 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள ஆலயத்திற்கு கடந்த 06 மாத காலத்திற்கு முதலே சுதந்திரமாகச் சென்று வழிபட அனுமதி வழங்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்து இருந்த போதிலும், கடுமையான கட்டுப்பாடுகளுடன், விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்திற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆலயத்திற்கு மாத்திரம் செல்வதற்கு என உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பிரத்தியேகப் பாதை அமைக்கப்பட்டு, குறித்த பாதை ஊடாக மக்கள் ஆலயத்திற்கு மாத்திரம் சென்று வழிபட்டு திரும்ப இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆலயத்திற்கு செல்வதற்காக அப்பகுதி மக்கள் தமது சொந்த நிதியிலேயே பிரத்தியேக பாதை அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## நெடுந்...

பொலிஸார் திடீர் சோதனைக்கு உட்படுத்தியமையால் பயணிகள் அச்சமடைந்தனர்.

நேற்று மாலை குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு நெடுந்தாரகையில் வந்த பயணிகள் மற்றும் அவர்களது உடைமைகள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றதுடன் இதன்போது சந்தேகத்திற்கு இடமான பொருட்களோ, கைதுகளோ இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாட்டின் தென் கடி இடம்பெறுகின்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து நாட்டின் சகல பகுதிகளிலும் இவ்வாறான திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ம-7)

## இரணைமடுக்...

யளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சாந்தபுரத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான பிச்சைதுரைராசா (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுப் பிற்பகல் வலையை எறிந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை தவறி நீரில் வீழ்ந்து மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)


மஹஜன சம்பத
திகதி 2025.07.17
சீட்டிழுப்பு இலக்கம் 5893
T 1 3 2 0 8 2
அத சம்பத
T 2 0 8 2
சீட்டிழுப்பு இலக்கம் 0468
National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.07.17
சீட்டிழுப்பு இலக்கம் 009
மிதுனம் 01 05 42 53

தன நிதானய
திகதி - 2025.07.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1923
X 35 43 54 57 X
Double Chance 78523

மெகா பவர்
திகதி 17/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2241
T 02 17 34 67 76

ஜய
திகதி 2025.07.17
சீட்டிழுப்பு இலக்கம் 0161
A 6 0 1 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4135
சீட்டிழுப்பு திகதி 17.07.2025
E 18 21 56 59
E

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.17
சீட்டிழுப்பு இலக்கம் 1202
இடபம் 06 10 22 43 இடபம்
01269 14

உத்தியோகபூர்வ முடிவுகள்
17.07.2025 வெற்றி வாரம் 0601
H 3 7 1 5 2 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.000.000.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2867
சீட்டிழுப்பு திகதி 2025.07.17 தினம் வியாழக்கிழமை
08 10 16 37 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,991,028.00

சனிதா
திகதி 17.07.2025 வெற்றி வாரம் 5028
09 34 57 59 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,819,279.20

சசிரி
வெற்றி வாரம் 727
சீட்டிழுப்பு திகதி 17.07.2025
வியாழக்கிழமை
04 12 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4579
சீட்டிழுப்பு திகதி 17.07.2025 தினம் வியாழக்கிழமை
03 26 27 28 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,562,610.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 26 11 12 39 70
2043
17.07.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.582,931,300.40

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2693
சீட்டிழுப்பு திகதி 2025.07.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,908,279.20
09 10 51 63 J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனா - தவிசாளர்....

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் கழிவகற்றல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனால் அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், யாழ்.மாவட்டத்தில் உள்ள எந்தப் பிரதேச சபைகளும் கழிவகற்றலை ஒழுங்கு சீராக மேற்கொள்ளவில்லை.

இன்று (நேற்று) நான் கே.கே.எஸ் வீதியினால் வீதியோரத்தில் பல இடங்களில் குப்பைகள் குவியல் குவியலாக இருந்தது என்று பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்த கருத்தை ஆட்சேபித்த தவிசாளர்கள் சரியான முறையில் கழிவகற்றலை செய்யவில்லை என்று பொதுப் படையாகக் கூற வேண்டாம் என்று தெரிவித்தனர்.

மேற்குறித்த தவிசாளர்களின் கருத்துக்கு எதிர் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறப்பினர் அர்ச்சுனா இராமநாதன், கழிவகற்றல் செய்யாமல் வீதிப் புனரமைப்பு ஒப்பந்தக்காரரிடம் கொமிசன் அடிப்பதற்கு முயற்சிப்பதை முதலில் நிறுத்துங்கள். மக்கள் சேவையை ஒழுங்காகச் செய்யுங்கள் எனக் கடுமையாகச் சாடினார்.

மேற்குறித்த கருத்தை எதிர்த்த ஒட்டுமொத்த தவிசாளர்களும் அர்ச்சுனாவின் கருத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரிடம் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கருத்துக்கு தமது கண்டனத்தையும் தெரிவித்தனர்.

இதனால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட மண்டபம் சற்று நேரம் பெரும் அல்லோலப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (ம-க)

## அமெரிக்க....

இல்லாவிட்டால் அமெரிக்கா இலங்கையுடனான ஒப்பந்தத்தை மீறியுள்ளதாகவே கருதப்படும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர் அமெரிக்கா இலங்கையின் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவின் உறுப்பு நாடு. அவர்கள் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். அதனால் அமெரிக்கா இலங்கையுடன் கலந்துரையாட முன்வர வேண்டும்.

அமெரிக்காவுடன் கலந்துரையாடி இந்த 30 சதவீத வரியை குறைத்துக்கொள்ள முடியாவிட்டால், அமெரிக்கா எமது ஒப்பந்தத்தை மீறியுள்ளதாகவே கருத்தப்படும். எவ்வாறு இருந்தாலும் இந்த 30 சதவீத வரியை நாங்கள் குறைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது எமது பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றார். (ம-7)

## செம்மணிப்.....

செய்யப்பட்டிடிருந்தது.

போராட்டத்தில் கலந்து கொண்டோர், புத்த தேசமா? புதைகுழிகள் தேசமா? செம்மணயில் எலும்புகளாக எம்மவர்கள், சர்வதேசமே தமிழர்களை ஏமாற்றாதே..!, யுத்த குற்றத்தின் சாட்சி செம்மணி, வட கிழக்கில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து' போன்ற பதாதைகளை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல், சிவில் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது போராட்டகாரர்கள், பேரணியாக முன்னோக்கி நகர்த்த முற்பட்ட வேளை, பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அமைதியின்மை ஏற்பட்டது.

போராட்டக்களத்தில் கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் போராட்டம் அமைதியாக நிறைவடைந்தது.

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழியில் இதுவரை 65 என்புத்தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் செம்மணிப் புதைகுழியில் இருந்து நீலநிறப் பையுடன் மீட்கப்பட்ட எஸ்-25 என அடையாளப்படுத்தப்பட்ட என்புத் தொகுதி சுமார் 4 முதல் 5 வயதுடைய பிள்ளையுடையது என்று நீதிமன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி மீதான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள், எதிர்வரும் 21 ஆம் திகதி இடம் பெறும் என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

(மற்றுமொரு செய்தி உள்ளே)


பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | K.K.S வீதி, சுன்னாகம்.
BARATHY
சித்தன்கேணி
(எமது மூன்று நிறுவனங்களிலும்)
A/L 2027
கலை - வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்
19.07.2025 சனிக்கிழமை
புதிய அனுமதிகளை மூன்று நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்
077 376 3511
(C-3442)

பெற்றோர், மாணவர்களின் தெரிவு...
A/L - 2027 கணக்கீடு
Mr.BALAKAJEN
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்
● ஆரம்ப தேர்ச்சியிலிருந்து கற்பிக்கப்படும்.
● புதிய அனுமதி வழங்கப்படும்.
KBK கந்தர்மடம் கொழும்புத்துறை
online classes
077 452 0043
A/L 2025, A/L 2026புதிய அனுமதி வழங்கப்படுகின்றன.
(C-3435)

A/L வரலாறு
❖ 2K27 புதிய பிரிவுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
❖ 2K26 பிரிவுக்கு புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
மாவட்ட மற்றும் தேசிய சாதனை படைத்த மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர்
M.பத்மன்
(B.A(Hons) History, P.G.D.E, Dip.in.psy, M.A(Hons) History, M.Ed (OUSL))
(C-3443)
கற்பிக்கும் இடங்கள்
DMI ஆரியகுளம் யாழ்ப்பாணம்
Bitsman மானிப்பாய்
High College குளப்பிட்டி, கொக்குவில்
தொடர்புகளுக்கு : 077 482 5587

"கல்வியுலகில் கலங்கரை விளக்கு"
NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
யாழ்.நகரில் அனுபவம் மிக்க விசேட ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில்.....
A/L 2027 கலை வர்த்தகம்
ஆரம்பம் : 19.07.2025 சனி
காலை: 8.00 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 076 535 0999
(C-3434)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 2130/- | Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-3445)

மணப்பெண் தேவை
01. அரியாலை, இந்து, 1988, அஸ்வினி, MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28868)
02. காரைநகர், இந்து, 1995, மகம், MBBS, BDS Dental Surgen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53958)
03. மாங்குளம், இந்து, 1994, பரணி, MBBS, UK. FLAP Reading மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (48027)
04. அளவெட்டி, இந்து, 1987, மகம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (30453)
05. நெடுந்தீவு, இந்து, 1990, விசாகம், MBBS Veterinary Surgen Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32700)
06. மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34944)
07. நெடுந்தீவு, இந்து, 1989, பூராட்டாதி, MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(29898)
08. திருநெல்வேலி, இந்து 1990, விசாகம், MBBS Doctor, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32016)
09. மீசாலை, இந்து, 1994, மிருகசீரிடம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(33190)
10. யாழ்ப்பாணம் - வவுனியா, Roman Catholic, MBBS Doctor, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(45497)
எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.
S.Sharma J.P www.thaalee.com 077 539 3728
(C-3446)

DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2027
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் : 19.07.2025 காலை 8.00 மணி (சனி)
நிர்வாகம் : 077 778 9815
(C-3441)

வேலையாட்கள் தேவை
புத்தூரில் இயங்கும் அரைக்கும் ஆலை ஒன்றிற்கு அனுபவமான வேலை ஆட்கள் (ஆண்) தேவை.
(1333)
077 373 5261

மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(1334)
077 864 9878

தேவை
கட்டட இடிபாடுகள் தேவை.
தொடர்புகளுக்கு:
(4832)
075 944 4601

வந்துவிட்டது... இப்பொழுது விற்பனையில்
பூமாலை POOMALAI
தரம் 4,5
பூக்களில் வெவ்வேறு வாசனைகள், வெவ்வேறு வடிவங்கள், வர்ணங்கள் பல விதம், அதுதான் பூமாலை!

தேசிய ரீதியில் கற்பித்தலில் முன்னணி வகிக்கும் 12 ஆரம்பக்கல்வி ஆசிரியவளவாளர்களினால் 12 எதிர்பார்க்கை வினாத்தாள்கள், விடைகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது
விலை 950/-
UNILANKA'S PUBLICATION
No. 326, Sea Street, Colombo - 11. Hotline : 077-6258778 What'sapp : 077-6258778 / 077-7220324
(C-3444)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org